**செ.கு.எண் :30** **நாள் : 31.03.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (31.3.2022) தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

அனைவருக்கும் என் அன்பான வணக்கம்!

மூன்று நாள் பயணமாக நேற்று டெல்லிக்கு நான் வருகை தந்திருக்கிறேன். முதலமைச்சராகப் பொறுப்பேற்று எனது மூன்றாவது டெல்லிப் பயணம் இது!

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை இன்று மதியம் நாடாளுமன்ற வளாகத்தில் சந்தித்தேன். சந்திப்பதற்காக நேரம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் கோரிக்கை வைத்த போது உடனடியாக அதற்கு நேரம் ஒதுக்கி சந்தித்தமைக்காக நான் முதலில் பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய மிக முக்கியமான 14 கோரிக்கைகள் அடங்கிய மனுவினை (Memorandum) மாண்புமிகு பிரதமரிடத்தில் நான் வழங்கினேன். அந்தக் கோரிக்கைகளில் இருக்கக்கூடிய முக்கியத்துவத்தை அவருக்கு நான் தெளிவாக எடுத்துரைத்தேன். அப்போது பொறுமையாக அனைத்தையும் கேட்ட பிரதமர் அவர்கள், அதன் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக என்னிடத்தில் உறுதி அளித்திருக்கிறார்கள். பிரதமர் அவர்கள் அளித்த உறுதிமொழிக்கும் நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை தற்போது இங்கு இருக்கக்கூடிய ஊடகங்கள் மூலமாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிரதமருடனான இந்தச் சந்திப்பு மகிழ்ச்சிக்குரியதாகவும், மனநிறைவை அளிப்பதாகவும் அமைந்திருந்தது. பிரதமர் அவர்களிடம் நான் அளித்த கோரிக்கை மனு ஏற்கனவே உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், குறிப்பிட்ட சில முக்கியமான கோரிக்கைகளை மட்டும் நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

இலங்கையில் இப்போது நடந்து வரும் அசாதாரண சூழலை நீங்கள் அறிவீர்கள். பொருளாதார நெருக்கடியில் சிக்கி வேதனையில் தவித்துக் கொண்டிருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் உதவி செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும். அதேபோல, அத்தியாவசியமான பொருள்களையும் உயிர் காக்கும் மருத்துகளையும் அவர்களுக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை நான்

வைத்திருக்கிறேன். அதேநேரத்தில், இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமையும், அரசியல் உரிமையும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அந்த கோரிக்கையையும் எடுத்து வைத்திருக்கிறேன். தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை குறித்தும் வலியுறுத்தி இருக்கிறேன். கச்சத்தீவு மீட்பு குறித்தும் கோரிக்கை வைத்திருக்கிறேன்.

தொடர்ந்து, உக்ரைனில் பாதிக்கப்பட்ட இந்திய மாணவர்களின் மருத்துவக் கல்லூரிப் படிப்பை இந்தியாவில் தொடர அனுமதி வழங்க வேண்டும் என்றும் நான் எடுத்து வைத்திருக்கிறேன்.

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதற்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்கக் கூடாது என்ற அந்தக் கோரிக்கையையும் வைத்திருக்கிறேன்.

மாநிலங்களுடன் மேல் வரிகள் மற்றும் கூடுதல் கட்டணம் மூலம் வரும் வருவாயைப் பகிர்ந்து அளிக்க வேண்டும்.

ஜூன் 2022-க்குப் பின்பு ஜி.எஸ்.டி. இழப்பீட்டை தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

நரிக்குறவர்கள் / குருவிக்காரர்கள் சமூகங்களை தமிழ்நாட்டின், "பட்டியல் மற்றும் பழங்குடியினர்" பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இப்படி பல்வேறு கோரிக்கைகளை நான் பிரதமரிடத்தில் எடுத்து வைத்திருக்கிறேன். முக்கியமாக பிரதமரிடத்திலும், மாண்புமிகு உள்துறை அமைச்சரிடத்திலும் நான் அழுத்தத்துடன் பதிவு செய்து என்னவென்று கேட்டீர்களானால், நீட் தேர்வில் இருந்து விலக்கு கேட்கும் சட்டமுன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி இரண்டாவது முறை தமிழக ஆளுநருக்கு நாங்கள் அனுப்பி வைத்தோம். ஆனால் இதுவரையில் குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் ஆளுநர் இன்னமும் தாமதம் செய்து கொண்டிருக்கிறார். இந்தச் சட்டமுன்வடிவுக்கு உரிய நடவடிக்கை எடுக்க ஒன்றிய அரசை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தொடர்ந்து, ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்களிடத்தில், தமிழகத்திற்கு வரவேண்டிய வெள்ள நிவாரண நிதிகள் குறித்தும் வலியுறுத்தி இருக்கிறேன். காவல் மற்றும் தீயணைப்புத் துறையை நவீனப்படுத்தவும், நிதி ஒதுக்கீடு கோரி இருக்கிறேன்.

அடுத்ததாக, ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்களிடத்தில், தமிழகத்தில் அமையவிருக்கக்கூடிய புதிய விமான நிலையங்கள் அமைத்திட தேவைப்படக்கூடிய பாதுகாப்புத் துறை வசம் இருக்கக்கூடிய நிலங்களை ஒதுக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் DRDO ஆய்வுக்கூடம் அமைக்கப்பட வேண்டும்.

சேலம் இரும்பாலையின் மிகை நிலத்தைப் பாதுகாப்பு தொழில் பூங்காவிற்கு வழங்க வேண்டும்.

ஒன்றிய அரசு பாதுகாப்புத் துறை தொடர்பாக சில திட்டமிடுதல்களைச் செய்து வருகிறது. ஒன்றிய அரசு அமைக்கத் திட்டமிட்டுள்ள, “Aviation Technology Hub” ஒன்றினை கோவையில் அமைக்க வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறேன்.

ஒன்றிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்களை பொறுத்தவரை, பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறேன்.

முக்கியமாக சொல்ல வேண்டுமென்றால்,

சென்னை - கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையை ஆறுவழிச் சாலையாக ஆக்கவும் -

சென்னை - மதுரவாயல் உயர்மட்டச் சாலையை ஸ்ரீபெரும்புதூர் வரை நீட்டிக்கவும் கோரிக்கை வைத்துள்ளேன்.

தாம்பரம் - செங்கல்பட்டுவரை உயர் மட்ட பாலம் அமைக்கப்பட வேண்டும்.

மாநிலத்தில் நிலுவையிலுள்ள தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை விரைவில் அறிவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளேன்.

என்னுடைய இன்றைய சந்திப்பைப் பொறுத்தவரை, மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு உள்துறை அமைச்சர், மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஆகியோருடனான இந்த சந்திப்புகள் மனநிறைவு அளிப்பதாக அமைந்திருந்தன.

எங்களின் உரையாடலின் போது, மாண்புமிகு நிதின் கட்கரி அவர்கள், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நெடுஞ்சாலைத் துறையில் அதிக அளவிலான திட்டங்களைச் செயல்படுத்த இருப்பதாக அவரே கூறினார்.

அதேபோல், மாண்புமிகு ராஜ்நாத் சிங் அவர்கள், நாட்டின் பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகளை துவங்குவதற்கு தமிழ்நாடுதான் உகந்த மாநிலமாகத் திகழ்வதாக பாராட்டி அதை எங்களிடத்திலே எடுத்துச் சொன்னார்.

நான் இன்று வைத்த கோரிக்கைகளை வலியுறுத்தி எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளார்கள். தொடர்ந்து மீண்டும் அதை வலியுறுத்துவார்கள் என்பதையும் உங்கள் மூலமாக தமிழக மக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாளைய தினம், மாண்புமிகு நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களையும், மாண்புமிகு வர்த்தகம் மற்றும் உணவுத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் அவர்களையும் நான் சந்திக்க இருக்கிறேன், அதற்கான நேரத்தை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்துக்கான கோரிக்கைகளை நிச்சயம் அவர்களிடத்தில் நான் எடுத்து வைப்பேன்.

அதேபோல, ஒரு டெல்லி மாடல் ஸ்கூல் மற்றும் ஒரு மருத்துவமனை ஆகியவற்றை நாளைய தினம் நான் பார்வையிட இருக்கிறேன். அப்போது மாண்புமிகு டெல்லி முதல்வர் அவர்களும் என்னுடன் வருவதாகச் சொல்லியிருக்கிறார். அவருடன் சேர்ந்து நான் பார்வையிட இருக்கிறேன்.

அதைத் தொடர்ந்து, ஏப்ரல் இரண்டாம் நாள் மாலையில் ‘அண்ணா - கலைஞர் அறிவாலயம்’ திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது. இந்த நேரத்தில் நான் உங்களையும் கேட்டுக் கொள்கிறேன், அனைவரும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என்ற அந்த அன்பான வேண்டுகோளை வைத்து, முடித்துக் கொள்கிறேன்.

கேள்வி – மேகதாது அணை விவகாரம் தொடர்பாக பிரதமரிடம் பேசியது குறித்து…

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் – இந்த விஷயம் குறித்து ஏற்கனவே பேசி இருக்கிறேன். இது தொடர்பாக கேட்டு இருக்கிறீர்கள். அதை தொடர்ந்து வலியுறுத்தி, எது நியாயமோ அதை செய்வோம் என்று உறுதி அளித்திருக்கிறார்.

கேள்வி – தமிழ் மக்களுக்கு பாதுகாவலராக இருக்கிறீர்கள். டெல்லியில் ஏழு தமிழ் பள்ளிக் கூடங்களில் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களின் கல்வித் தரம் கேள்விக்குறியாக உள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் அப்பள்ளிக்கூடத்திற்கு அம்மா பிளாக் கட்டுவதற்காக பல கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் பல விதிமீறல்கள் நடந்ததாக தெரிகிறது. அது குறித்து ஏதாவது விசாரணை செய்வீர்களா?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் – நிச்சயமாக விசாரிக்கப்படும். இப்போது சொன்னதை வைத்து விசாரிக்கப்படும். நாளைய தினம் டில்லியில் உள்ள மாடல் பள்ளிக் கூடத்தை பார்வையிட உள்ளேன். அதற்கு ஆர்வமாக டில்லி முதலமைச்சர் அவர்களும் மகிழ்ச்சியுடன் தானும் வருவதாக தெரிவித்துள்ளார்.

கேள்வி – திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் பாதுகாப்புத் துறையின் மூலம் தமிழகத்தில் செயல்படுத்தவுள்ள திட்டங்கள் குறித்து ஏதாவது தெரிவித்தாரா?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் – அதைப் பற்றி கேட்ட போது, அதற்கெல்லாம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். அதற்குரிய அதிகாரிகளையும் அழைத்து கூட்டத்தை நடத்தி, என்ன செய்யப் போகிறோம் என்பதைத் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். விரைவில் எல்லாப் பணிகளையும் முடித்து தருவதாக உறுதி அளித்துள்ளார்.

கேள்வி - கச்சத்தீவு பிரச்சனை தொடர்ந்து நீடித்து வருகிறது. ஒன்றிய அரசு எந்தவித முயற்சியும் செய்வதாக தெரியவில்லை. சர்வதேச நீதிமன்றத்தை நாடுவதற்காக வாய்ப்புகள் உள்ளதா. அது குறித்து ஏதாவது ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதா?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் – நிச்சயமாக ஏற்கனவே இதுகுறித்து சட்டரீதியாக நாங்கள் ஆலோசனை மேற்கொண்டு உள்ளோம். அது தொடரும்.

அதற்கான முயற்சிகளை எடுப்பதற்காகத்தான் இன்று பிரதமர் அவர்களிடத்திலும் வலியுறுத்தி சொல்லி இருக்கிறோம்.

கேள்வி – பிரதமருக்கு நன்றி தெரிவித்து உள்ளீர்கள். இந்த முறை அவருடைய அணுகுமுறை எப்படி இருந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் – நேரம் கொடுத்ததற்கு நன்றி சொன்னேன். உரிய நேரத்தில், உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். அதற்கும் நன்றி சொன்னேன். வேலையை முடித்ததற்காக சொல்லவில்லை. செய்து தருவதாக உறுதி கொடுத்திருக்கிறார், அதற்காக நன்றி சொன்னேன். அதனால் நம்பிக்கை இருக்கிறது.

கேள்வி – இலங்கை தமிழர்கள் அதிகமாக வந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களை அகதிகளாக பதிவு செய்வதா, சட்ட விரோதமாக வந்ததாக பதிவு செய்வதா என்று ஒரு குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது. ஒன்றிய அரசிடம் அவர்களை எப்படி பதிவு செய்யலாம் என்று விளக்கம் கேட்டு இருக்கிறார்கள். அதற்கு என்ன பதில் கொடுத்துள்ளார்கள். வருபவர்களுக்கு எந்தமாதிரியான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் – இன்றைக்கு கொடுத்த கோரிக்கையில் இதுவும் அடங்கியுள்ளது. அதனைக் குறித்தும் பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். ஏற்கனவே இலங்கையில் இருந்து வருபவர்களுக்கு அகதிகள் என்று பெயர் சூட்டப்பட்டு இருந்ததை நாங்கள் மாற்றி, புலம்பெயர்ந்த தமிழர்கள் என்று அழைத்து, அவர்களுக்கு நிதி ஒதுக்கி, எல்லா வசதிகளும் ஏற்படுத்தி தந்திருக்கிறோம்.

கேள்வி – பாராளுமன்றத்தில் பல்வேறு கட்சித் தலைவர்களை சந்தித்தீர்கள். அவர்களுடைய அணுகுமுறை எப்படி இருந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் – நாடாளுமன்ற மைய வளாகத்தில் பல்வேறு கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. எல்லோரும் "சிறப்பாக தமிழ்நாட்டில் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள்" என்று பாராட்டு தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு இப்போது இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலை குறித்து பேசினார்கள்.

கேள்வி – திருமதி சோனியா காந்தி சந்திப்பு குறித்து..

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் – அவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தார்கள். அவர்களை பார்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அதுமட்டுமல்ல, எப்போது நான் டில்லி வந்தாலும் அவர்களை சந்திக்காமல் இருந்தது இல்லை. வருகின்ற 2-ஆம் தேதி கட்சியினுடைய அலுவலகத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கும் திருமதி சோனியா காந்தி அவர்களும், திரு. ராகுல் காந்தி அவர்களும் வருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அங்கேயும் அவர்களைச் சந்திப்பேன்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in